DVC.1/2020 Dated:19.03.2024

ம.சா.1–அமுதா

**(மனுதாரர் ஆஜர். 1,2 எதிர்மனுதாரர்கள் ஆஜர்.)**

**(மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது).**

1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் மகன் துபாயில் கோடிக்கணக்கில் செலவு செய்து அலுவலகம் வைத்து தொழில் செய்கிறார் என்றால் இல்லை. தற்போதும் என் மகன் துபாயில் தங்கியிருக்கிறார் என்றால் இல்லை. தற்போதும் நான் தங்கியிருக்கும் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டின் அருகில் அவரது அண்ணன்களின் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரரை பிரிந்ததிலிருந்து சன்னாசிநல்லூரில் உள்ள என் அப்பா வீட்டில் தான் தங்கியிருந்தேன் என்றால் இல்லை. என்னை அடித்து அடித்து துரத்துவார்கள் நான் மீண்டும் வந்துவிடுவேன். என் மகனை எந்த ஊரில் உள்ள ஆரம்பபள்ளியில் சேர்த்தேன் என்றால் சன்னாசிநல்லூர். தற்போது நான் என் மகன், மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் வசிக்கிறேன் என்றால் நான் தனியாக தான் வசிக்கிறேன். அவர்கள் அவ்வப்போது வந்து செல்வார்கள். இரட்டை குழந்தைகள் பிறந்ததால் 4 மாதங்களாக என்னுடன் வசிக்கிறார்கள். என் மகனும் மருமகளும் என்னை நன்றாக கவனித்து கொள்வார்கள் என்றால் அவர்களுக்கு 3 குழந்தைகள் இருப்பதால் என்னை கவனித்து கொள்ள முடியவில்லை. 1ம் எதிர்மனுதாரரை பிரிந்து, அவரை அடித்து துரத்திவிட்டு அவர் வீட்டில் நான் குடியிருக்கிறேன் என்றால் இல்லை. நீதிமன்ற ஆணைப்படி தான் அங்கு தங்கியிருக்கிறேன். 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான சொத்துகளில் பாதி சொத்துகள் என் மகனுக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். இந்த மனுப்படி எனக்கு எந்த ஜீவனாம்சமும், பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற கெட்ட

எண்ணத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.